**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.45** **நாள்: 01.04.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 2017–18ம் நிதியாண்டில் ரூ.1060.50 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

-----

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2017–18ஆம் நிதியாண்டில் வருவாய்த்துறை மூலமாக சொத்துவரி ரூ.720.72/–கோடி, தொழில் வரி மூலமாக ரூ.339.78/–கோடி என மொத்தம் ரூ.1060.50/–கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வசூலானது, முந்தைய நிதியாண்டில் (2016–17) மேற்கொள்ளப்பட்ட வசூலைவிட, சொத்து வரியில் ரூ.25.27 கோடியும், தொழில் வரியில் ரூ.43.56/–கோடி என மொத்தம் ரூ.68.83/–கோடி கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், விடுமுறை நாட்களில் (29.03.2018 முதல் 31.03.2018 முடிய) சொத்துவரி மற்றும் தொழில்வரி செலுத்திட சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, சொத்துவரி ரூ.36.1446/–கோடி, தொழில் வரி மூலமாக ரூ.26.617/–கோடி என மொத்தம் ரூ.62.7616/– கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.**